**ஹொரண நகர சபை**
**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மே 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 யூலை 06 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கததைத் தவிர 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஹொரண நகர சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலையும் காசுப்பாய்ச்சலையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலையை வெளிப்படுத்தியிருக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்ளூராட்சி திணைக்களத்தின் மூலம் சபைக்கு வழங்கப்பட்டிருந்த கப் வண்டிக்காகச் செலுத்தப்பட வேண்டிய தொகை ரூபா 3,178,456 தொகையான போதிலும், இதற்காக ரூபா 7,000,000 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 706,272 தொகையான கடன் தவணைப் பணப் பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நூலகப் புத்தகங்கள் அகற்றப்பட்ட பெறுமதியான ரூபா 34,190 தொகை மூலதனப் பயன்பாட்டு வருமானப் பங்களிப்புக் கணக்கில் இருந்து அகற்றப்பட வேண்டிய போதிலும் திரண்ட நிதிக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் களஞ்சிய இருப்பு வழங்கல்கள் ரூபா 932,868 திட்டமிடல் மற்றும் உபகரணக் கணக்கிற்கு வரவு வைக்கப்படுவதற்குப் பதிலாக திரண்ட நிதியக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2014 ஆம்ஆண்டின் போது கொள்வனவுகளிற்காக வழங்குனர் ஒருவருக்குச் செலுத்த வேண்டிய ரூபா 64,950 தொகை கடன்கொடுத்தோர் கணக்கு செலவு வைக்கப்பட்டு செலவினக் கணக்கு வரவு வைக்கப்படுவதற்குப் பதிலாக வைப்புக் கணக்கு வரவு வைக்கப்பட்டிருந்ததுடன் வாகனப் பழுதுபார்த்தல் செலவினத் தொகையான ரூபா 16,576 தொகை செலவினக்

கணக்கு வரவு வைக்கப்படுவதற்குப் பதிலாக முற்கொடுப்பனவுக் கணக்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

**1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் ரூபா 28,569,157 தொகையான கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 16,172,065 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 21,315,431 ஆக இருந்தது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

செயலாளரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' |
| (i) | வீதவரியும் வரியும் | 24,946 | 17,600 | 11,551 |
| (ii) | வாடகை | 6,139 | 9,703 | 1,716 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 150 | 150 | -- |
| (vi) | ஏனை வருமானம் | 491 | 488 | 1,147 |

**2.2.2 வீதவரி**

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவையான வீதவரி மீதி ரூபா 8,929,567 ஆகக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது பட்டியல் இடப்பட்டவை ரூபா 21,409,809 ஆகக் காணப்பட்டது. 2014 திசெம்பர் 31 வரையிலும் நிலுவை மீதியில் அறவிடப்பட்ட தொகை ரூபா 4,767,698 தொகையாகவும், தற்போதைய அறவீடுகள் ரூபா 13,933,481 தொகையாகக் காணப்பட்டது. இதன் படி, வீத வரி அறவீட்டின் முன்னேற்றம் 62 சதவீதமாகக் காணப்பட்டது.

**2.2.3 வினோத வரி**

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலவிய ரூபா 1,092,361 தொகையான நிலுவையான வினோத வரி மீதியில் 2014 ஒக்டோபர் 04 ஆம் திகதி வரையில் ரூபா 27,272 தொகை மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

**2.2.4 கடை வாடகை**

மீளாய்வாண்டின் இறுதியில் நிலவிய நிலுவையான வியாபார நிலையக் கடை வாடகை மீதியில் ரூபா 1,388,342 தொகை 2015 பெப்ரவரி 20 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.3 செயற்பாட்டு மீளாய்வு**

**2.3. போதிய அதிகாரப் பொறுப்பால் சான்றுறுதிப்படுத்தப்பட்டிராத கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255) அதிகாரம் 159(ஊ) பிரிவின் பிரகாரம் ஏதேனும் ஓர் சமய, கல்வி நடவடிக்கைகள், புண்ணிய நடவடிக்கைகள் மற்றும் நலன்புரி நடவடிக்கைகளுக்கான உதவிப் பணம் வழங்கப்படுகையில் ஒரு வருடத்திற்கு ரூபா 5,000 கூட்டுத்தொகையான பணத்திற்கு மேற்படலாகாது எனவும், அவ் எல்லை மீறப்படின் அமைச்சரின் எழுத்து மூல அங்கீகாரம் பெறப்பட வேண்டியதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கையில் அவ்வாறு அங்கீகாரம் பெறப்படாது சபையின் கலாச்சார விழாவிற்காக ரூபா 411,203 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) அறவிடப்படாது காணப்படும் நிலுவையாக உள்ள ஊழியர் கடன தொகையான ரூபா 90,265 தொகையும், கைத்தொழில் வரித் தொகையான ரூபா 10,500 தொகையும் கடை வாடகையான ரூபா 4,363,916 தொகையும் அமைச்சரின் அங்கீகாரம் இன்றி சபையின் தீர்மானத்தின் படி பதிவளிக்கப்பட்டிருந்தது.

**2.3.2 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

2006 சனவரி 25 ஆம் திகதிய தேசிய கொள்வனவு முகவர் நிறுவகத்தின் சுற்றறிக்கையின் 5.4.4.1 இன் பிரகாரம், ஏதேனும் ஓர் செயற்பாட்டிற்காக வழங்கப்பட வேண்டிய முற்பணத் தொகை மதிப்பிடப்பட்ட செலவினத்தில் 20 சதவீதத்தைப் பார்க்கிலும் அதிகரிக்கப்படலாகாத போதிலும் சபையின் மின் பிறப்பாக்கி இயந்திரம் பழுதுபார்க்கப்படுவதற்காக மதிப்பிடப்பட்ட செலவினத்தில் 50 சதவீதமான அதாவது ரூபா 110,824 தொகை முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**2.3.3 செயற்பாட்டு/முகாமைத்துவ திறமையீனங்கள்**

(அ) 2014 திசெம்பர் 31 ஆம் திகதி அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவையான வருமான மீதித் தொகையான ரூபா 14,414,322 தொகை நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255 அதிகாரம்) 170 (அ) மற்றும் 170 (2) ஆம் பிரிவின் படி அறவிடப்படுவதற்கு செயலாளர் நடடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) குழந்தைப் பருவ அபிவிருத்தி நிலையத்தில் 2014 ஆம் ஆண்டில் 295 சிறுவர்கள் கல்விகற்று வந்திருந்ததுடன் 29 ஆசிரியர்கள் சேவையில்

ஈடுபட்டிருந்தனர். ஆரம்பப் பாடசாலைக் சட்டக் கோவையின் படி 20 மாணவர்களுக்காக ஒரு ஆசிரியர் ஈடுபடுத்தப்பட வேண்டிய போதிலும் 2014 ஆம் ஆண்டின் போது 10 மாணவர்களுக்காக ஒரு ஆசிரியர் படி சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமையால் மிகையான பதவியணி ஈடுபடுத்தப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(i) கணக்கீடு
(ii) வருமான நிருவாகம்
(iii) செலவினக் கட்டுப்பாடு
(iv) சொத்து முகாமைத்துவம்